ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

தென்கலை ஸம்ப்ரதாய

# சாற்றுமுறை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# சாற்றுமுறை

மணவாளமாமுனிகளால் நியமிக்கப்பெற்றது

நன்றுந் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும்⋆
    ஒன்றும் குறையில்லை ஓதினோம் - குன்றம்
எடுத்தானடி சேரிராமானுசன் தாள்⋆
    பிடித்தார் பிடித்தாரைப் பற்றி⋆
வாழி திருக்குருகூர் வாழி திருமழிசை⋆
    வாழி திருமல்லி வளநாடு - வாழி
சுழிபொறித்த நீர்ப் பொன்னித் தென் அரங்கன் தன்னை⋆
    வழிபறித்த வாளன் வலி

திருநாடு வாழி திருப்பொருநல் வாழி⋆
    திருநாட்டுத் தென்குருகூர் வாழி - திருநாட்டுச்
சிட்டத்தமர் வாழி - வாழி சடகோபன்⋆
    இட்டத் தமிழ்ப்பாவிசை

மங்கை நகர் வாழி வண்குறையலூர் வாழி⋆
    செங்கை அருள்மாரி சீர்வாழி - பொங்கு புனல்
மண்ணித் துறை வாழி - வாழி பரகாலன்
    ஏண்ணில் தமிழ்ப் பாவிசை

வாழியரோ தென் குருகை வாழியரோ தென் புதுவை⋆
    வாழியரோ தென் குறையல் மாநகரம் - வாழியரோ

தக்கோர் பரவும் தடஞ்சூழ் பெரும்பூதூர் ⋆
    முக்கோல் பிடித்தமுனி

மொழியைக் கடக்கும் பெரும் புகழான் - வஞ்ச முக்குறும்பாம்
    குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான் சரண் கூடியபின் ⋆
பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ் பாடியல்லா
    வழியைக் கடத்தல் - எனக்கினி யாதும் வருத்தம் அன்றே

நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நிரயத்துய்க்கும் ⋆
    வஞ்சக் குறும்பின் வகையறுத்தேன் - மாயவாதியர் தாம்
அஞ்சப் பிறந்தவன் சீமாதவனடிக் கன்பு செய்யும் ⋆
    தஞ்சத்தொருவன் சரணாம்புயமென் தலைக் கணிந்தே

ஊழிதொறு மூழிதொறு முலகமுய்ய
    உம்பர்களும் கேட்டுய்ய - அன்பினாலே
வாழியெனும் பூதம்பேய் பொய்கை மாறன்
    மழிசையர்கோன் பட்டர் பிரான் மங்கை வேந்தன் ⋆
கோழியர்கோன் தொண்டர்துகள் பாணன் கோதை
    குலமுனிவன் கூறிய நூலோதி - வீதி
வாழியென வருந்திரளை வாழ்த்துவார் தம்
    மலரடி என்சென்னிக்கு மலர்ந்த பூவே

## மணவாளமாமுனிகள் வாழித்திருநாமம்

இப்புவியில் அரங்கேசர்க்கு ஈடளித்தான் வாழியே ⋆
    எழில் திருவாய்மொழிப் பிள்ளை இணை அடியோன் வாழியே ⋆
ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான் வாழியே ⋆
    அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்றும் வாழியே ⋆

எப்புவியும் ச்ரீசைலம் ஏத்த வந்தோன் வாழியே ⋆
ஏராரும் எதிராசர் என உதித்தான் வாழியே ⋆
முப்புரி நூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே ⋆
மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து ⋆ உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் ⋆
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து ⋆ நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது ⋆
இற்றைப் பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா ! ⋆
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் ⋆ உன்றன்னோ -
டுற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் ⋆
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை ⋆
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி ⋆
அங்கப் பறை கொண்டவாற்றை ⋆ அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன ⋆
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே ⋆
இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள் ⋆
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் ⋆
எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் எம்பாவாய்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு

prapatti.com
sundersarukkai

அடியோமோடும் நின்னோடும் ⋆
    பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின்வல மார்பினில் ⋆
    வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
    சுடராழியும் பல்லாண்டு ⋆
படைபோர் புக்கு முழங்கும் ⋆
    அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

ஸர்வதே$_3$ஶத$_3$ஶாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா ।
ராமானுஜார்யதி$_3$வ்யாஜ்ஞா வர்த$_4$தாமபி$_4$வர்த$_4$தாம் ॥

ராமானுஜார்யதி$_3$வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா ।
தி$_3$க$_3$ந்தவ்யாபிநீ பூ$_4$யாத்ஸா ஹி லோகஹிதைஷிணீ ॥

ஶ்ரீமந் ஶ்ரீரங்க$_3$ஶ்ரியமநுபத்$_3$ரவாமநுதி$_3$நம் ஸம்வர்த$_4$ய ।
ஶ்ரீமந் ஶ்ரீரங்க$_3$ஶ்ரியமநுபத்$_3$ரவாமநுதி$_3$நம் ஸம்வர்த$_4$ய ॥

நம: ஶ்ரீஶைலநாதா$_2$ய குந்தீநக$_3$ர ஜந்மநே ।
ப்ரஸாத$_3$லப்$_3$த$_4$ பரமப்ராப்ய கைங்கர்யஶாலிநே ॥

ஶ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ர ப்ரவணம் வந்தே$_3$ ரம்ய ஜாமாதரம் முநிம் ॥

வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்
    வாழும் ⋆ மணவாள மாமுனிவன் - வாழியவன் ⋆
மாறன் திருவாய்மொழிப் பொருளை ⋆ மாநிலத்தொர்
    தேறும் படியுரைக்கும் சீர்

செய்ய தாமரைத் தாளிணை வாழியே⋆
　　சேலை வாழி திருநாபி வாழியே⋆
துய்யமார்பும் புரிநூலும் வாழியே⋆
　　சுந்தரத் திருத்தோளிணை வாழியே⋆
கையுமேந்திய முக்கோலும் வாழியே⋆
　　கருணை பொங்கிய கண்ணிணை வாழியே⋆
பொய்யிலாத மணவாள மாமுனி⋆
　　புந்தி வாழி புகழ் வாழி வாழியே

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ⋆
　　சடகோபன் தண்டமிழ் நூல் வாழ⋆ - கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ⋆ மணவாள மாமுனியே !
　　இன்னுமொரு நூற்றாண்டிரும்

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்⋆
　　சோதி மணி மாடம் தோன்றும் ஊர்⋆ - நீதியால்
நல்ல பத்தர் வாழும் ஊர்⋆ நான்மறைகள் ஓதுமூர்⋆
　　வில்லிபுத்துர் வேதக் கோனூர்⋆
பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்⋆
　　வேதம் அனைத்துக்கும் வித்தாகும்⋆ கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை⋆
　　வையம் சுமப்பதும் வம்பு

திருவாடிப் பூரத்து சகத்துதித்தாள் வாழியே⋆
　　திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே⋆
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே⋆
　　பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே⋆



prapatti dot com sunder kidambi

ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே ⋆
உயர் அரங்கற்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே ⋆
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே ⋆
வண் புதுவை நகர்க் கோதை மலர்ப் பதங்கள் வாழியே

சாற்றுமுறை முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

sunder kidāmbi prapatti dot com sunder kidāmbi